SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் கார்த்திகை 12 MAALAI EXPRESS ஹிஜ்ரி 1446 ஜமாதுல் அல்வல் 24

மாநிலம் பயனுற!

● புதுச்சேரி ● புதன்கிழமை, நவம்பர் 27, 2024 ● வெளியூர்: 28-11-2024, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 140 ● 6 பக்கம் ● ரூ.6


மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007



வேலூர் மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி
சார்பாக பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்...

## கொங்கு மண்டலங்களில் கனமழை பெய்யும்

# கடலூர் அருகே கரையை கடக்கும் 'ஃபெங்கல்' புயல்



### தனியார் வானிலை ஆர்வலர் தகவல்

சென்னை, நவ. 27-

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியானது நேற்று முன்தினம் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. அது மேலும் வலுவடைந்து நேற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியது. இந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று இரவு புயலாகமாறும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஃபெங்கல் புயலானது சென்னை கடலூர் மாவட்டம் பரங்கிப் பேட்டை இடையே வருகிற 30ந்தேதி கரையை கடக்க வாய்ப்புள்ளதாக தனியார் வானிலை ஆர்வலர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார். மேலும், இன்று உருவாகும் ஃபெங்கல் புயல் 30ந்தேதி கரையை கடக்கும்போது சென்னையில் அதிகனமழை பெய்யும். புயல் கரையை கடந்த பிறகு உள் மாவட்டங்கள் மற்றும் ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணா மலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் கொங்கு மண்டலங்களிலும் கனமழை பெய்யக்கூடும். சென்னையில் இன்று முதல் மிதமான மழை தொடங்கி படிப்படியாக புயல் கரையை கடக்கும் 30ந்தேதி கனமழை கொட்டி தீர்க்கும் என்றும் தெரிவித்துள்ளார்.


பிறவாமை அருளும் அகத்தியரின் ஆத்ம காயத்ரி மந்திரம்
ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.
பொருள்: எனது ஆன்மாவே, நீ பரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...
தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்
1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.
பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்
9789032199 7996774757
www.anbaalayam.com






## தமிழக அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



தூத்துக்குடி மாவட்டம் கயத்தார் ஊராட்சி ஒன்றியம் அகிலாண்டபுரம் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## இகார்ட்டின் சப்ளை செயின் பணமாக்குதல் முயற்சிகள் 3 ஆண்டுகளில் 8 எக்ஸ் வளர்ச்சியை எட்டியுள்ளது




கோவை, நவ. 27-

இந்தியாவின் முன்னணி 4 பிஎல் சப்ளை செயின் நிறுவனங்களில் ஒன்றான இகார்ட் ,அதன் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் செயல்பாட்டுத் திறனுடன் லாஜிஸ்டிக்ஸ்த் துறையைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. இகார்ட் அதன் செயல்பாடுகளை மேம்படுத்தியுள்ளது. மற்றும் விநியோகச் சங்கிலியைப் பணமாக்குவதற்கான அதன் முயற்சிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் 8 எக்ஸ் வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன, பிராண்டுகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தங்கள் விநியோகச் சங்கிலித் தேவைகளுக்காக இகார்ட் டின் லாஜிஸ்டிக்ஸ் திறன்களைப் பயன்படுத்தி நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்யும் திறனைப் பெற்றுள்ளனர். தினசரி 6 மில்லியனுக்கும் அதிகமான ஏற்றுமதி திறன் கொண்ட, இகார்ட் டின் கடைசி மைல் நெட்வொர்க் இந்திய அஞ்சல் குறியீடுகளில் 98% பரவியுள்ளது, 50+ மில்லியன் கன அடி கிடங்குகள் மற்றும் 7,000 டிரக்குகளின் வாகனத்தொகுப்பு மூலம் ஆதரிக்கப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளில், இகார்ட் டின் பணமாக்குதல் முயற்சிகள் அதன் வாடிக்கையாளர் தளத்தை 10 எக்ஸ் விரிவுபடுத்த வழிவகுத்தது, அதேசமயம் தொழில்துறை ஆண்டுக்கு 5 10% வளர்ச்சியடைந்து வருகிறது. வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத நிறுவனங்கள் போன்ற நிதி நிறுவனங்களுக்கு விரிவான ஆவண விநியோக தீர்வுகளை வழங்குவதற்கான அதன் சமீபத்திய முயற்சி குறிப்பிடத்தக்கதாகும். பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற ஆவணங்களைக் கையாளும் இந்தத் திறன் துறைகள் முழுவதும் நம்பகமான ஆவணப் போக்குவரத்தை உறுதி செய்வதன் மூலம் மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் நெகிழ்வான லாஜிஸ்டிக்ஸ் நெட்வொர்க்குக்கு பங்களிக்கிறது. இகார்ட் டின் தலைமை வணிக அதிகாரி மணி பூஷன் கூறுகையில் "எங்கள் வளர்ச்சிக் கதை எண்கள் மட்டுமல்ல, பிராண்டுகள் மற்றும் நுகர்வோருக்கு நாங்கள் உருவாக்கும் மதிப்பையும் சார்ந்திருக்கிறது. ஓட்டுநர் திறன் மற்றும் அளவிடுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் தொழில்துறையின் முதல் தொழில்நுட்பங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி கண்டுபிடிப்புகளை மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இகார்ட், ஒட்டுமொத்த இந்தியாவின் லாஜிஸ்டிக்ஸ் சூழல் அமைப்புக்கும் ஒரு முக்கிய வேறுபாடு மற்றும் செயல்படுத்துபவை என்று நாங்கள் நம்புகிறோம். என்று கூறினார்.

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



ராமநாதபுரம், நவ. 27-

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மேற்கு ஒன்றியம், காரான் ஊராட்சி, சேதுநகர் கிளை கழகத்தின் சார்பில் உதயமூர்த்தி ஏற்பாட்டில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு வாலாந்தரவையில் அமைந்துள்ள செஸ்ட் இன் முதியோர் பராமரிப்பு இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது. இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் தண்டபாணி சிவலிங்கம், மாவட்ட பிரதிநிதி முருகபூபதி, வாலாந்தரவை ஊராட்சி மன்றதலைவர் பூரணவேல், அயலகஅணி மாவட்ட துணை அமைப்பாளர் மஹாதீர், வழுதூர் பஞ்சு, சேதுநகர் வேலாயுதம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## அரசியலமைப்பு முகப்புரை உறுதிமொழி ஏற்பு



தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் 75வது இந்திய அரசியலமைப்பு தினத்தினை முன்னிட்டு மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் அனைத்து துறை அலுவலர்களும் இந்திய அரசியலமைப்பு முகப்புரை உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

## புயல் எச்சரிக்கை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை ஆய்வுக்கூட்டம்



புதுவையில் புயல் எச்சரிக்கை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை தொடர்பான ஆய்வுக்கூட்டம் முதல்வர் ரங்கசாமி தலைமையில் நடந்தது. இதில் சபாநயாகர் செல்வம், பொதுப்பணித்துறை அமைச்சர் லட்சுமிநாராயணன், ஆட்சியர் குலோத்துங்கன், கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ, பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மதுரை அறம் அறக்கட்டளை சார்பில் விருது வழங்கும் விழா



தருமபுரி, நவ. 27-

மதுரை அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு விருது வழங்கும் விழா தலைநகர் சென்னையில் நடைபெற்றது.இவ்விழாவில் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், மொரப்பூர் ஒன்றியம் எம். தொப்பம்பட்டி ஊராட்சி ஆண்டிபட்டி கிராமத்தை சேர்ந்த சமூக சேவகர் மொ.குமரவேல் சமூக சேவையை பாராட்டி அறம் அமைப்பின் சார்பில் சிறந்த சமூக சேவைக்கான விருது, சான்றிதழ் மற்றும் மெடல் ஆகியவற்றை திரைப்பட இயக்குனர் நடிகர் பாக்கியராஜ், சிறந்த பேச்சாளர் ஈரோடு மகேஷ், மக்கள் டி.வி.புகழ் பாஸ்கரன், அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை தலைவர் நல்ல மணி ஆகியோர் விருது வழங்கி வாழ்த்தினார்கள். சமூக சேவைக்கான விருது பெற்ற மொ.குமரவேலுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தருமபுரி மாவட்ட கழக செயலாளர் கோ. ராமதாஸ், மாநில தீர்மானக்குழு செயலாளர் கவிஞர் மா.மணிவேந்தன், தாயகம் புகைப்பட கலைஞர் போட்டோ ராஜா, மாவட்ட அவைத்தலைவர் இரா.குணசேகரன், தருமபுரி வழக்கறிஞர் ராஜேந்திரன், வழக்கறிஞர் வேல் முருகன், ஆசிரியர் தங்கப்பிரகாசம், அரூர் கிழக்கு ஒன்றிய மதிமுக செயலாளர் வேம்பை மா.முருகேசன், மொரப்பூர் ஒன்றிய செயலாளர் இரா.ஜெகநாதன், மளிகை குமார் மற்றும் ஆண்டிப்பட்டி தாய்மண் குழு, உதவும் கரங்கள் மொரப்பூர் குழு, உழவர் நகர் கல்லாவி ரோடு மொரப்பூர் குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசு துறை அதிகாரிகள், பொதுமக்கள் உள்பட பலர் திரளாக பாராட்டி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

## தேனியில் முப்பெரும் விழா



தேனி, நவ. 27-

தேனி மாவட்டத்தில் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் தேனி மாவட்டதின் சார்பாக தேனி ஹோட்டல் தெய்வாவில் முப்பெரும் விழா நடைபெற்றது. இந்த விழாவை மாநில தலைவர் புருஷோத்தமன் தலைமையிலும், மாநில பொருளாளர் தங்கபாண்டியன், மாநில செயல் தலைவர் ஸ்ரீராம், நிர்வாக குழு உறுப்பினர் ராஜா, வழக்கறிஞர் ரவி, மாநில இணைச் செயலாளர் சசிகுமார் முன்னிலையிலும், தேனி மாவட்ட தலைவர் நாராயண ராஜா, அவர்களது ஏற்பாட்டிலும், செயலாளர் பால்ராஜ், பொருளாளர் ரஞ்சித் அவர்களின் பங்களிப்பில், து.தலைவர் பால குருசாமி, இணை செயலாளர் மகேந்திரபாண்டி தொகுத்து வழங்க செயற்குழு உறுப்பினர்கள் ரஜினி கண்ணன், பாண்டியராஜன், ஒருங்கிணப்பாளர்கள் சிவராஜ், விஜய்குமார், ராஜா, சுரேஷ் ஆகியோர் விழாவினை வழி நடத்தினர்.

மேலும் அனைத்து மண்டல பொருப்பாளர்களும், உறுப்பினர்களும், கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். நிகழ்ச்சி நிறைவாக அனைத்து பொருப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும், அடையாள அட்டை வழங்கப்பட்டது. புதிய நிர்வாகிகளுக்கு பொருப்புகள் வழங்கப்பட்டன. தமிழகத்தில்முதன் முதலாக அனைத்து உறுப்பினர்களுக்கும் இலவச இன்சூரன்ஸ் திட்டத்தினை மாநில தலைவர் புருஷோத்தமன் வழங்கினர்.

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் கமல் கிஷோர் தகவல்



தென்காசி, நவ. 27-

தென்காசி மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 29.11.2024 வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் தலைமையில் நடைபெற உள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்கிறார்கள். எனவே, அனைத்து வட்டார விவசாயிகளும் கலந்து கொள்வதோடு மனுவில் தங்களது கைபேசி எண்ணையும் குறிப்பிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாய குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுவிற்கான ஒப்புகையும் மனுவின் கோரிக்கை தொடர்பான விபரங்களும் அனைத்து வகை கைபேசிகளிலும் பார்க்கும் வண்ணம் செயலி வாயிலாக குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இக்குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா



தூத்துக்குடி, நவ. 27-

கடம்பூரில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினின் 47வயது பிறந்த நாளை முன்னிட்டு கடம்பூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.வி.எஸ்.பி.நாகராஜா தலைமையில் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவின்போது அங்கு ஏழை, எளிய பெண்கள் 47 பேருக்கு சேலையும், 47 ஆண்களுக்கு வேஷ்டியையும் நாகராஜா வழங்கினார். இதற்கு முன்னதாக அனைவருக்கும் ராட்சத கேக் வெட்டிக் கொண்டாடினர். இந்த நிகழ்ச்சியில் சிதம்பராபுரம் பஞ்சாயத்து துணை தலைவர் கண்டி சுப்புராஜ் முன்னிலை வகித்தார். மாவட்ட பிரதிநிதி சுதந்திர ராஜ், கிளைச் செயலாளர் முருகன் நர்சிங்பெருமாள், ஜெயராஜ், மாரியப்பன், மனோராஜ், கடம்பூர் பேரூராட்சி மன்ற ஐந்தாவது வார்டு கவுன்சிலர் மதியழகன், நகர மகளிர் அணி தலைவி வலதியம்மாள், துணை தலைவி முத்துமாரி, மற்றும் நிர்வாகிகள் தங்கவெயிலாட்சி, சிவகாமி, மாரியம்மாள், தனலட்சுமி, தூய்மை பணியாளர்கள், கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

### அரியலூர் அரசு மருத்துவமனைக்கு

## முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்து அரியவகை ரத்தம் அனுப்பி வைப்பு




விழுப்புரம், நவ. 27-

விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனை மருத்துவ ரத்த வங்கியில் இருந்து தமிழ்நாடு மருத்துவர்கள் ஆலோசனைப்படி அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் பகுதியில் அரியலூர் அரசு மருத்துவமனையில் பெண் ஒருவருக்கு அரியவகை ரத்தம் பாம்பே ஓ ரத்த வகை பிரசவத்திற்காக தேவைப்பட்டது. இதை அறிந்த மனிதம் காப்போம் தன்னார்வலர் குழு ஒருங்கிணைப்பாளர் சந்துரு குமார் தலைமையில் கொட்டும் மழையின் பாராமல் அந்தப் பெண்ணுக்கு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து விழுப்புரத்தில் இருந்து பல்லவன் ரயில் மூலம் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்தப் பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதல்வர், துணை முதல்வர் உருவம் வரைந்த பத்தமடை பாய் வழங்கல்



நெல்லை, நவ. 27-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை திருநெல்வேலி மாவட்டம் பத்தமடை சிறப்பு நிலைப் பேரூராட்சி தலைவர் அபிதா ஜமால்தீன் நேரில் சந்தித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திரு உருவம் கொண்ட உலகப் புகழ் பெற்ற பத்தமடை பாயினை பரிசாக வழங்கினார். அப்போது கழகத்தின் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகர்ப்புற நிர்வாக துறை அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் உடன் இருந்தனர். மேலும் நெல்லை கிழக்கு மாவட்ட அயலக அணி தலைவர் ஜமால்தீன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் SNJ சேக் மைதீன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்திய அரசியலமைப்பு தின விழா



**சிதம்பரம், நவ. 27–**

சிதம்பரம்அண்ணாமலைப் பல்கலைக்கழக அம்பேத்கர் இருக்கையின் சார்பாக இந்திய அரசியலமைப்பு தின விழா கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முதலாவதாக அம்பேத்கர் இருக்கையின் பேராசிரியர் சவுந்திரராஜன் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினர் மேனாள் நீதியரசர் சந்துரு அரசியலமைப்பு முகவுரையை வாசிக்க அனைவரும் உறுதி மொழியேற்றனர்.

இவ்விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர் அருட்செல்வி தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். அவர் தனது உரையில், அண்ணல் அம்பேத்கரின் அரசமைப்பினால் பெண்கள் பெற்ற உரிமைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றம் குறித்தும் எடுத்துரைத்தார். பல்கலைக்கழக பதிவாளர் பிரகாஷ் முன்னிலை வகித்து உரையாற்றினார். அவர் தனது உரையில், அரசியலமைப்பில் அம்பேத்கரின் பங்கினை எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் பொறியியல் புல முதன்மையர் கார்த்திகேயன் வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக மேனாள் நீதியரசர். சந்துரு கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தனதுஉரையில், அரசியலமைப்பு முகவுரையின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். மற்றும் அவர் மாணவர்களை "இந்திய அரசியலமைப்பு" புத்தகத்தை வாசித்து பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார். டாக்டர். அம்பேத்கர் இருக்கை சார்பில் நடைபெற்ற கட்டுரை போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன் மற்றும் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர். மற்றும் இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழக புலமுதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசியர்கள், ஆசிரியர் மற்றும் ஊழியர் சங்க பொறுப்பாளர்கள், மக்கள் தொடர்பு அதிகாரி ரெத்தின சம்பத், மாணவர்கள், ஆசிரியரல்லா பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். டாக்டர்.அம்பேத்கர் இருக்கையின் உதவிபேராசியர் முனைவர் ராதிகாராணி நன்றியுரை யாற்றினார். விழா ஏற்பாடுகளை டாக்டர் அம்பேத்கர் இருக்கையின் பேராசியர்கள் சௌந்திரராஜன் மற்றும் முனைவர் ராதிகாரணி ஏற்பாடு செய்திருந்தனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திமுக சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்



**கோவை, நவ. 27–**

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் நகராட்சியில் தமிழ்நாடு துணை முதல்வரும் திமுக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக சார்பில் மாபெரும் ரத்த தான முகாம் மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவியர்களுக்கு வினா விடை புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சி திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. முகாமில் திரளான திமுக தொண்டர்கள் கலந்துகொண்டு ரத்ததானம் செய்தார்கள். மேலும் ரத்ததானம் செய்தவர்களுக்கு ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழ வகைகள் மற்றும் ஜூஸ் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டது. இதற்கு முன்பாக துணை முதல்வரின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக கழக கொடி ஏற்றி கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து மேட்டுப்பாளையம் நகரவை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு மாணவியருக்கு பொதுத்தேர்விற்கான வழிகாட்டி புத்தகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் சி.ஆர்.ஆர்.ராமச்சந்திரன், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினரின் தனி உதவியாளர் ரோச் தனசாமி, மேட்டுப்பாளையம் நகர தலைவர் மெஹரிபா பர்வீன், துணைத் தலைவர் அருள் வடிவு, காரமடை கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், நகர் செயலாளர்கள் மேட்டுப்பாளையம் முனுசாமி, முகமது யூனிஸ், காரமடை வெங்கடேஷ், கூடலூர் அறிவரசு, பேரூர் கழக செயலாளர்கள் சிறுமுகை உதயகுமார், வீரபாண்டி சுரேஷ், வடக்கு மாவட்ட அணி நிர்வாகிகள் இளைஞரணி அமைப்பாளர் ஹக்கீம், துணை அமைப்பாளர் விக்னேஷ்குமார், சுற்றுச்சூழல் அணி துணை தலைவர் மனோகரன், மீனவரணி அமைப்பாளர் ராம் குட்டி, துணை அமைப்பாளர் பாபு, நெசவாளரணி அமைப்பாளர் நடராஜன், து.தலைவர் கணேசமூர்த்தி, மகளிர் அணி அமைப்பாளர் ரதி, இலக்கிய அணி அமைப்பாளர் ராஜேந்திரன், சிறுபான்மையர் அணி து.தலைவர் அலெக்ஸ், வர்த்தக அணி பத்மநாபன், விளையாட்டு மேம்பாட்டு துறை அணி சரவணகுமார், பொறியாளர் அணி திலீப் உட்பட திமுகவினர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா அறிவுறுத்தலின்படி அரசு தலைமை பொது மருத்துவமனை வளாகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில், பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

# அரசியலமைப்பு சட்ட தின விழா



**மதுரை, நவ. 27–**

மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக மதுரை மாநகர் மாவட்ட பாஜக வழக்கறிஞர் பிரிவு சார்பில் தேசிய அரசியலமைப்பு சட்ட தின விழா கொண்டாடப்பட்டது.மதுரை மாநகர் மாவட்ட பாஜக வழக்கறிஞர் பிரிவு தலைவர் ஐயப்பராஜா தலைமை தாங்கினார். மாநில பாஜக வழக்கறிஞர் பிரிவு தலைவர்வணங்கா முடி தேசிய அரசியலமைப்பு சட்ட தின விழாவை தொடங்கி வைத்தார். அதன் பின்பு அவர் தெரிவிக்கையில், தமிழ் சினிமா பின்னணி பாடகி இசைவாணி சபரி மலை ஐயப்பன் பக்தி பாடலை கொச்சைப்படுத்தி பாடி உள்ள செயல் கண்டிக்க தக்கதாகும். இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பாஜக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# போதை பொருள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு பேரணி




**மதுரை, நவ. 27–**

இணையவழியாக விண்ணப்பித்த பேராசிரியர், உதவி பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நூலகர், உடற்கல்வி இயக்குநர்களுக்கு இடப்பெயர்வு ஆணைகளை வழங்கி போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" பற்றிய விழிப்புணர்வு பேரணியை உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 2024–2025ஆம் ஆண்டிற்கான பொதுகலந்தாய் விற்காக இணையவழியாக விண்ணப் பித்த பேராசிரியர், உதவி பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நூலகர், உடற் கல்வி இயக்குநர்களுக்கு இடப்பெயர்வு ஆணைகளை வழங்கி, "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" பற்றிய விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி, அரசு பொறியியல் கல்லூரி மற்றும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்களுக்கான 2024–2025ஆம் ஆண்டிற்கான பொது கலந்தாய் விற்காக இணையவழியாக அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து 377 விண்ணப்பங் களும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து விண்ணப்பங் களும் பெறப்பட்டன. பொது கலந்தாய்வில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து 198 உதவி, இணைப்பேராசிரியர்கள், நூலகர், உடற்கல்வி இயக்குநர்களுக்கு இடப்பெயர்வு ஆணை வழங்கப்படு கின்றது. அரசு பொறியியல் கல்லூரி கள் மற்றும் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து 344 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 93 பேராசிரியர்கள், இணைப்பேராசிரி யர்கள், உதவிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கு இடப்பெயர்வு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளிலிருந்து 29 உதவி, இணைப்பேராசிரியர் களுக்கும், அரசு பொறியியல் கல்லூரி களிலிருந்து 5 பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்களுக்கும், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து 15 இணைப்பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்க ளுக்கும் விருப்ப இடப்பெயர்வு ஆணைகள் வழங்கப்பபட்டுள்ளது. மற்றவர்களுக்கு இணையவழியாக ஆணைகள் அனுப்பி வைக்கப்படும். "போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும்" என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அறி வுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அரசு. அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதிக் கல்லூரிகள் சார்ந்த அனைத்து கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி களிலும், ஒவ்வொரு கல்லூரியிலும் குறைந்தபட்சம் நூறு மாணவர்கள் வீதம், ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட "போதைப்பொருள் எதிர்ப் புக் குழுக்கள்" உருவாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களிடமும் மாணவர் களிடமும் விழிப்புணர்வை இக்குழுக் கள் கொண்டு சேர்க்கும் என தெரிவித்தார்.

தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் மதுரை மீனாட்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், போதைப்பொருள் எதிர்ப்புக் குழுவி னர் நடத்திய "போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு" பற்றிய விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தார். இப்பேரணியின்போது, பெருந்திரளான மாணவர்கள் ஊர் வலமாகச் சென்று போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான புகார் களைக் கட்டணமில்லாத Toll free எண்களான 10581 மற்றும் 94984 10581 ஆகிய தொலைபேசி எண்களில் பொதுமக்கள் இது தொடர்பான புகார் தெரிவிக்கவும், உரிய விழிப் புணர்வு ஏற்படுத்தவும், போதைப் பொருள் எதிர்ப்புப் பற்றிய விழிப்பு ணர்வுத் துண்டுப் பிரசுரங்களைப் பொதுமக்களிடம் வழங்கினர்.

மேலும், மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனை வர் கோவி. செழியன் தலைமையில் பேராசிரியர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் இந்திய அரசியலைப்பு சட்டத்தின் முகப்புரை உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.இக்கூட்டத்தில், உயர் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர். கே.கோபால், தொழில் நுட்பக் கல்வி ஆணையர் ஜி.ஆப்ர காம், மற்றும் கல்லூரி கல்வி ஆணை யர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, மீனாட்சி அரசு கலை மற்றும் அறிவி யல் கல்லூரி முதல்வர் முனைவர் வானதி மற்றும் பேராசிரியர் பெரு மக்கள், கல்லூரி மாணவ, மாணவி யர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



**மதுரை, நவ. 27–**

திமு கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் மதுரையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா நடந்தது.

திமு கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

மதுரை மகபூப்பாளையம்.அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மதுரை மாநகர் மாவட்ட அயலக அணி சார்பாக அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 837 பேருக்கு கல்வி உபகரணங்களை வழங்கினார். தொடர்ந்து மஹபூப்பாளையம் சீவிசிகி சிறப்பு பள்ளியில் எல்லிஸ் நகர் பகுதி கழகம் சார்பாக நாற்காலிகள், தலையணை, தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினார். தொடர்ந்து ஷி.ஷி காலனி 61வது வட்டக் கழகம் சார்பாக மாநகராட்சி தொடக்க பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு புத்தகப்பை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்த நிகழ்வில் மேயர் இந்திராணி பொன் வசந்த், மண்டல தலைவர் பாண்டிச்செல்வி, பகுதி திமுக செயலாளர் பிகே செந்தில், மதுரை மாநகர் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சையது, மாமன்ற உறுப்பினர்கள் செல்வி செந்தில், மகாலெட்சுமி அழகுசுந்தரம், பாமா முருகன் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் அழகு சுந்தரம், பிகே சுரேஷ், பூங்கா மணிகண்டன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# 75வது அரசமைப்பு சட்ட நாள் விழா



**சுவாமிமலை, நவ. 27–**

நாட்டின் 75வது அரசமைப்புச் சட்ட நாள் தினத்தையொட்டி கும்பகோணம் வழக்கறிஞர் சங்கத்தில் அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசித்து உறுதிமொழி ஏற்றுக் கொண்டார்கள். இதில் சங்கத் தலைவர் விவேகானந்தன், செயலாளர் செந்தில்ராஜன், அரசு வழக்கறிஞர்கள் கவிதா அசோகன், விஜயகுமார், மூத்த வழக்கறிஞர்கள் ஜெயராமன், சக்கரபாணி, கலியபெருமாள், நடராஜன், வழக்கறிஞர்கள், சங்கர், இளங்கோவன், பாஸ்கரன், காஸ்பரோ, ஆனந்த்ராஜ் ராகவன், துணை செயலாளர் பாலாஜி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு உறுதிமொழி ஏற்றார்கள்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● புதன் ● நவம்பர் 27, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# பள்ளி மாணவர்களுக்கான பேண்ட் வாத்திய குழு போட்டி




கோவை, நவ. 27–

கோவை மாவட்டம் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் ஏற்பாட்டின்பேரில் பள்ளி மாணவர்களுக்கான பேண்ட் வாத்திய குழு போட்டிகள் பி.ஆர்.எஸ். வளாகத்தில் நடைப்பெற்றது. இதில் பதினொன்று பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பேண்டு குழுவினர் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் கார்மல் கார்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பாக வாசித்து மூன்றாம் பரிசு பெற்றனர். சிறப்பாக வாசித்த மாணவர்களுக்கு பரிசாக கோப்பைகளும், ரொக்க பரிசாக ரூ. மூன்றாயிரம் வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும் ஏற்பாடு செய்த ரோட்டரி கிளப் ஒருங்கிணைப் பாளர்களுக்கும் பள்ளியின் நிர்வாகம் சார்பாக பள்ளியின் முதல்வர் அருட்தந்தை ஆரோக்கிய ததேயூஸ் வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரியில் நவீன நுண்துளை மூட்டு மாற்று அறுவை சிகிச்சை: அரசு மருத்துவர்கள் சாதனை



கிருஷ்ணகிரி, நவ. 27–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கபட்டது. இதில் எலும்பியல் பிரிவு தொடங்கிய இரண்டு ஆண்டுகளில், 100வது நவீன மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து அரசு மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர். இதனை அறுவை சிகிச்சை செய்துகொண்ட நோயாளிகளுடன் மருத்துவக் குழுவினர் கேக் வெட்டி கொண்டாடினர். 100வது நவீன மூட்டு மாற்று அறுவை சிகிச்சை என்பது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மற்றுமொரு புதிய மைல்கல், தனியார் மருத்துவமனையில் நவீன மூட்டு மாற்று அறுவை செய்வதற்கு 3 லட்சம் ரூபாய் வரை செலவாகும். ஆனால் அரசு மருத்துவக் கல்லூரியில் தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தில் இலவசமாக செய்யபட்டு வருகிறது என்றும், பொதுமக்கள் சாலை விபத்து மற்றும் விளையாட்டு காயங்களால், மூட்டு பகுதி சவ்வு கிழிந்து அவதிப்படும் பட்சத்தில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும், கால் மூட்டுகளில் முன்புற இணைக்கும் தசைநார் அறுவை சிகிச்சை, பின்புற இணைக்கும் தசைநாற் அறுவை சிகிச்சை மற்றும் மெனிஸ்கஸ், போன்ற சவ்வு பிரச்சனைகளுக்கும், தோள்பட்டை வலி, அடிக்கடி மூட்டு விலகுதல், மற்றும் தோள்பட்டை சவ்வு கிழிந்த நபர்களுக்கு, எலும்பு முறிவு சிகிச்சையை சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு அதிநவீன அறுவை சிகிச்சை செய்யப் படுவதாகவும், தனியார் மருத்துவமனைக்கு ஈடாக அரசு மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சை இல்லாமல் நவீன முறையில் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை வழங்குவது இந்த மாவட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருக்கிறது என எலும்பு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் செந்தில் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியின்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் பூவதி, மருத்துவ கண்காணிப் பாளர் மருத்துவர் சந்திரசேகரன் உள்ளிட்ட எலும்பு முறிவு பிரிவில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளிட்ட ஏராளமானவர்கள் உடன் இருந்தனர்.

அரசு மருத்துவமனையில் தமிழக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் மூலமாக எங்களுக்கு மீண்டும் சராசரி வாழ்வு கிடைத்ததாக பயனாளிகள் தெரிவித்தனர். இறுதியாக சிறப்பாக அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்களுக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் பூவதி நினைவு பரிசு வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

# லிங்காரெட்டிப்பாளையத்தில் தனியார் சாராய ஆலை துவங்க அனுமதிக்க கூடாது

## அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் முதலமைச்சரிடம் மனு



புதுச்சேரி, நவ. 27–

புதுச்சேரி லிங்காரெட்டிப்பாளையத்தில் தனியார் சாராய ஆலையை மீண்டும் துவங்க அனுமதிக்க கூடாது என அப்பகுதி கிராம மக்கள், அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்

மனுவில், 'மண்ணாடிப்பட்டு தொகுதி லிங்காரெட்டிப்பாளையத்தில், 30 ஆண்டுகளுக்கு முன் இயங்கிய தனியார் சாராய தொழிற்சாலை (விஜயா டிஸ்லரீஸ்) மூலம் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததுடன், துர்நாற்றம் ஏற்பட்டு சுற்றுச்சூழல் பாதித்தது. இதையடுத்து, பொதுமக்கள் எதிர்ப்பு காரணமாக தனியார் சாராய தொழிற்சாலை மூடப்பட்டது.

மூடப்பட்ட தொழிற்சாலை இருந்த இடத்திலேயே புதிய நிர்வாகம் மீண்டும் சாராய தொழிற்சாலையை இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், லிங்காரெட்டிப் பாளையம், சந்தை புதுக்குப்பம், காட்டேரிக் குப்பம் அதனை சார்ந்த கிராமங்கள் நிலத்தடி நீர்மட்டம் மேலும் குறைந்து விவசாயம் பாதிப்பதுடன், சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது.

எனவே, விவசாயம் சார்ந்த கிராமப்புறங்களில் நிலத்தடி நீரை அதிகம் பயன்படுத்தும், சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கக் கூடாது' என, கூறப்பட்டுள்ளது.

# கடல் அலை சீற்றத்தில் சுற்றுலா பயணிகளை அழைத்து செல்லும் படகுகள் பறிமுதல்

## அமைச்சர் லட்சுமி நாராயணன் எச்சரிக்கை



புதுச்சேரி, நவ. 27–

கடல் சீற்றத்தால் மீன் பிடிக்க தடை செய்யப் பட்டுள்ள நிலையில், சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்லும் படகுகளின் உரிமம் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் லட்சுமி நாராயணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதுச்சேரியில் புயல் எச்சரிக்கை காரணமாக கடல் சீற்றத்துடன் உள்ளது. மீனவர்கள் 2 நாட்களாக மீன்பிடிக்க செல்லவில்லை. மீன்வளத் துறையும் கடலில் மீன் பிடிக்கக் கூடாது என உத்தரவு பிறப்பித்துள்ளது. மீன்பிடிக்கசெல்லாத படகுகள் தேங்காய்த்திட்டு துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் சுற்றுலா பயணிகளுக்காக சுற்றுலா படகுகள் இயக்கப்பட்டு வருகிறது. மழை புயல் எச்சரிக்கையை பொருட்படுத்தாமல், சில சுற்றுலா பயணிகள் படகு நேற்று வழக்கம்போல் இயங்கியது. சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு, கடல் அலையின் சீற்றத்தில் சாகசம் செய்வது போல் படகுகள் சென்று வருகின்றன. மீனவர்களுக்கு தடை விதிக்கும் போது, சுற்றுலா படகுகளுக்கும் தடை விதிக்க வேண்டும் என மீனவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து அமைச்சர் லட்சுமி நாராயணன் கூறுகையில் 'கடல் சீற்றத்தால் மீன்பிடிக்க தடை செய்யப்பட்டுள்ள நிலையில், சுற்றுலா படகுகளும் இயக்குவதற்கு ஏற்கனவே தடை உத்தரவு உள்ளது. அதனை மீறி சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்லும் படகுகளை கோஸ்ட் கார்டு மூலம் பறிமுதல் செய்யவும், உரிமம் ரத்து செய்ய கலெக்டரிடம் அறிவுறுத்தப் பட்டுள்ளது' என, தெரிவித்தார்.

# இந்திய அரசியலமைப்பு தின விழிப்புணர்வு பேரணி




புதுச்சேரி, நவ. 27–

பாரத பிரதமர் நரேந்திர மோடி அனைத்து மாநிலங்களி லும் நமது அரசியல் அமைப்பு தினம் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை ஏற்று நமது புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த சரோன் சொசைட்டி ஆப் பாண்டிச்சேரி தொண்டு நிறுவனம், புஷ்பா காந்தி முதியோர் இல்லம் மற்றும் அரியூர் ஸ்ரீ ராமச்சந்திரா வித்யாலயா உயர்நிலைப்பள்ளி இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்திய அரசியலமைப்பு தின விழிப்புணர்வு பேரணி அரியூரில் நடைபெற்றது. இந்த பேரணி துவக்க நிகழ்ச்சிக்கு சரோன் சொசைட்டி நிறுவனர் மோகன் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் அரியூர் ஸ்ரீ ராமச்சந்திரா வித்யாலயா பள்ளி நிறுவனர் சங்கரநாராயணன், புஷ்பா காந்தி முதியோர் அரவணைப்பு இல்ல நிர்வாகி சுகுணா மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பேரணியில் பங்கேற்ற தொண்டு நிறுவன நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அரியூர், பங்கூர் கிராமங்களை சுற்றி பேரணியாகச் சென்று அரசியல் அமைப்பு தினம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# காட்டுப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைச்சர் ரகுபதி திறந்து வைத்தார்







புதுக்கோட்டை, நவ. 27–

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள காட்டுப்பட்டியில் புதிய மின்மாற்றியை தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் திமுக பொன்னமராவதி தெற்கு ஒன்றிய செயலாளர் அடைக்கலமணி, பேரூர் கழகச் செயலாளர் அழகப்பன், மாவட்ட இளைஞரணி நிர்வாகி வேந்தன்பட்டி இளையராஜா, முன்னாள் தகவல் தொழில்நுட்ப பிரிவு திருமயம் தொகுதி நிர்வாகி ஆலவயல் முரளி சுப்பையா, நகர அவை தலைவர் தட்சிணாமூர்த்தி, மாவட்ட விளையாட்டு பிரிவு நிர்வாகி ஆலவயல் சுவாமிநாதன், திமுக மாவட்ட தொண்டர் அணி நிர்வாகி முத்தையா, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சுந்தரி ராமையா, ஊராட்சி மன்ற தலைவர் அழகு ராமச்சந்திரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# டெல்லியில் மத்திய அமைச்சர்களுடன் சபாநாயகர் செல்வம் சந்திப்பு



புதுச்சேரி, நவ. 27–

டில்லியில் முகாமிட்டுள்ள சபாநாயகர் செல்வம் மத்திய அமைச்சர்களை சந்தித்து பேசினார்.

புது டெல்லியில் முகாமிட்டுள்ள புதுச்சேரி சபாநாயகர் செல்வம் புதிய சட்டசபை கட்டுமான பணிக்கு நிதி ஒதுக்க வேண்டும் என, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து வலியுறுத்தினார்.

நேற்று மத்திய அமைச்சர்கள் அர்ஜுன் ராம் மேக்வால் மற்றும் ரயில்வே அமைச்சர் சோமண்ணா, பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் ஜிஜேந்திர சிங், செய்தி தொடர்பு ஒளிபரப்பு துறை அமைச்சர் முருகன், மத்திய பெட்ரோலிய துறை இணை அமைச்சர் சுரேஷ்கோபி, மத்திய அரசின் உள்துறை செயலர், உள்துறை கூடுதல் செயலர் ஆகியோரை மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்த சந்திப்பின்போது பாஜக மாநில செயலாளர் ஜெயக்குமார் உடன் இருந்தார்.

# பொம்மையார்பாளையம் ஊராட்சியில் படி திறன் மேம்பாட்டு பயிலகம் திறப்பு விழா



புதுச்சேரி, நவ. 27–

விழுப்புரம் மாவட்டம் வானூர் ஒன்றியம் பொம்மையார்பாளையம் ஊராட்சியில் கிராம கல்வி விழிப்புணர்வு மேம்பாடு சார்பாக படி திறன் மேம்பாட்டு பயிலகம் அலுவலக திறப்பு விழா பொம்மையார்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீசன், துணைத் தலைவர் பாலு ஆகியோர் தலைமையிலும், ஒன்றிய கவுன்சிலர் விஜயலட்சுமி எம்.ஆர் ராஜா மற்றும் வார்டு உறுப்பினர்கள், கிராம பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக அனைத்து சமூக அமைப்புகள் மற்றும் தன்னார்வலர்கள் கூட்டமைப்பு தலைவர் சித்தானந்தம், தமிழ்நாடு பாடநூல் கழகம்

முனைவர் செந்தில்செல்வன், தமிழ்நாடு சிறார் எழுத்தாளர்கள் சங்க பொதுச் செயலாளர், கல்வியாளர் சாலை செல்வம், கோட்டகுப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கந்தசாமி, தென்கோடிப்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி அறிவியல் ஆசிரியர் முனைவர் ஏழுமலை, காட்ராம்பாக்கம் உயர்நிலைப்பள்ளி அறிவியல் ஆசிரியர் ராமமூர்த்தி, கிராம நிர்வாக அலுவலர் சஷ்டி குமரன் ஆகியோர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களை படி பயிலக இளைஞர் குழுவினர்கள் எழிலரசன், சுரேஷ், சிவபெருமாள், சரண்ராஜ், சக்திவேல், தனசேகர், ராம்குமார், சிவபிரகாஷ், ஆகியோர்கள் சிறப்பித்தனர்.

தொடர்ந்து வரும் நாட்களில் அரசு போட்டி தேர்வுகளுக்கான விழிப்புணர்வு மற்றும் மாணவர்கள், இளைஞர்களுக்கான தனித்திறன் வளர்க்கும் பயிற்சிகள் அளிக்கப்படும் என தெரிவித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஊராட்சி செயலர் கிருபானந்தன், படி பயிலக ஒருங்கிணைப்பாளர் ராஜலட்சுமி சிவசங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

# புதுவையில் புயலை எதிர்கொள்ள தேசிய பேரிடர் மீட்பு படைக்கு அழைப்பு

## கலெக்டர் குலோத்துங்கன் தகவல்




புதுச்சேரி, நவ. 27–

புதுச்சேரியில் அவசர நிலையை எதிர்கொள்ள தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது என, கலெக்டர் குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். வங்கக்கடல் காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுச்சேரியில் வரும் 29ம் தேதி வரை கன மழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கலெக்டர் குலோத்துங்கன் தலைமையில் அவசர நிலையை எதிர்கொள்ள வருவாய், தீயணைப்பு, பொதுப்பணி, உள்ளாட்சி, குடிமைப் பொருள் வழங்கல், மின்சாரம், காவல், சுகாதாரம், கடலோர காவல் படை, சமூக நலம், துறைமுகம், மீனவர் நலன் மற்றும் பிற துறை அதிகாரிகள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலெக்டர் குலோத்துங்கன் கூறியதாவது, காற்றழுத்த தாழ்வு நிலை புயலாகமாறும்என்றமுன்னெச்சரிக்கையை கருத்தில் கொண்டு கன மற்றும் தொடர் மழையினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையிலும் இழப்புகளை தவிர்க்கும் நோக்கத்திலும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள அனைத்து துறைகளும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். மழைக்காலங்களில் பொதுமக்கள் தங்கக் கூடிய நிவாரண மையங்களான பள்ளிகளின் கட்டிடங்களை தயார் நிலையில் வைப்பதுடன் நிவாரண மையங்களில் தங்குவோருக்கு தேவையான உணவுப் பொருட்களையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மழைக் காலத்திற்கு தேவையான மருந்துகளை இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சித் துறை மழை வெள்ள நீரை வெளியேற்றிடும் பம்ப்புகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். சாலைகளில் மரங்கள் மழையினால் சாய்ந்தால் அதனை உடனடியாக அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீன்வளத்துறையினர் மழை வெள்ள காலங்களில் படகுகள் இயக்குபவர்கள் அவசரத்திற்கு பயன்படுத்த ஏதுவாக தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கடலுக்குள் செல்ல யாரையும் அனுமதிக்க கூடாது. சமூக நலத்துறை, மாற்றுத் திறனாளி, முதியோர், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களில் தேவை உள்ளோரை தெரிந்து கொண்டு அவர்களை உரிய நிவாரண மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் தங்க வைப்பதுடன், உணவும் வழங்கிட வேண்டும். அனைத்து துறைகளின் கட்டுப்பாட்டு அறைகள் முழு நேரமும் செயல்பட வேண்டும். அவசர நிலையினை எதிர்கொள்ள அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு படையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கடலோரக் காவல் படையினர் மாவட்ட நிர்வாகத்திற்கு தங்களின் ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் குலோத்துங்கன் பேசினார்.

# 2025ம் ஆண்டிற்கான அரசு விடுமுறை நாட்கள் அறிவிப்பு

புதுச்சேரி, நவ. 27-

புதுச்சேரியில் 2025ம் ஆண்டிற்கான அரசின் வரையறுக்கப்பட்ட விடுமுறை நாட்கள் அறிவிக்கப் பட்டுள்ளது. அதன்படி புதுச்சேரியில் 17 நாட்கள் அரசு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகம் அறிவிப்பு ஆணைப்படி, புதுச்சேரி அரசு விடுமுறை நாட்கள் கவர்னர் ஒப்புதலின் பேரில் அறிவிக்கப்பட்டுள்ளது. 2025ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி ஆங்கில புத்தாண்டு, ஜனவரி 14ம் தேதி பொங்கல் திருநாள், ஜனவரி 15ம் தேதி திருவள்ளுவர் தினம், மார்ச் 31ம் தேதி ரம்ஜான், ஏப்ரல் 14ம் தேதி தமிழ் புத்தாண்டு, ஏப்ரல் 18ம் தேதி புனித வெள்ளி, மே 1ம் தேதி மே தினம்.

ஜூன் 7ம் தேதி பக்ரீத் பண்டிகை, ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திர தினம், ஆகஸ்ட் 16ம் தேதி டிஜூரே டிரான்ஸ்பர் தினம், ஆகஸ்ட் 27ம் தேதி விநாயகர் சதுர்த்தி, செப்டம்பர் மாதம் 5ம் தேதி மிலாடி நபி, அக்டோபர் 1ம் தேதி சரஸ்வதி பூஜை, அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தி, அக்டோபர் 20ம் தேதி தீபாவளி, நவம்பர் 1ம் தேதி புதுச்சேரி விடுதலை நாள், டிசம்பர் 25ம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகை என்று மொத்தம் 17 நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

# புதுவையில் தொடர் மழை பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை

## மக்கள் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

புதுச்சேரி, நவ. 27-

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக புதுச்சேரி, தமிழகத்தில் கனமழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்தது.

கடந்த ஒரு சில தினங்களாக புதுவையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு வந்தது. கடந்த இரண்டு தினங்களாக சாரல் மழை பெய்து வந்த நிலையில் நேற்று காலை முதல் புதுவையில் மிதமான முதல் தொடர் மழை பெய்து வந்தது. குறிப்பாக கடற்கரை சாலை, விமான நிலையம், உப்பளம், ராஜ்பவன், உருளையன்பேட்டை, முத்தியால்பேட்டை, முதலியார் பேட்டை உள்ளிட்ட நகர பகுதிகளில் அதிகளவில் தொடர் மழை பெய்து வந்தது.

கிராமப் பகுதிகளான பாகூர், கரிக்கலாம்பாக்கம், திருக்கனூர், வில்லியனூர், மண்ணாடிப்பட்டு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மிதமான மழை பெய்து வந்தது.

நேற்று புதுச்சேரியில் பள்ளி, கல்லூரிகள் வழக்கம் போல செயல்பட்ட நிலையில், குறைந்த காற்றழுத்த வானிலை காரணமாக மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை எச்சரித்து இருந்தது. இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் தங்கள் படகுகளை தேங்காய்த்திட்டு துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைத்துள்ளனர். அதிக மழைக்கு வாய்ப்புள்ளதால் கட்டுமரம், வலை, விசைப்படகு ஆகிய வற்றை உரிமையாளர்கள் அவ்வப் போது கண்காணித்து பாதுகாத்துக் கொள்ளுமாறும் மீன்வளத்துறை அறிவுறுத்தி இருந்தது. மீன்வளத்துறையின் அவசரக் கால கட்டுப்பாட்டு அரை முழு நேரமும் இயங்கி வருகிறது. எனவே, மீனவர்கள் அவசர உதவிக்கு 0413 2353042 என்ற எண்ணிலோ அல்லது அவசர கால செயல் மையத்தின் 1070 மற்றும் 1977 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம் என்றும் மீன்வளத்துறை அறிவித்திருந்தது.

வங்கக் கடலில் வலுப்பெற்றுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறும் வாய்ப்புள்ளதால் அந்த புயலுக்கு 'ஃபெங்கல்' என பெயரிடப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்' கொடுக்கப் பட்டுள்ளது. இதனால் புதுவை மாநிலத்தின் காரைக்கால் மாவட்டத்தை பொருத்தவரை கடந்த 3 தினங்களாக பள்ளி, கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று மாலை கல்வி அமைச்சர் நமச்சிவாயம் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவித்து இருந்தார். நேற்று மாலை முதல் தொடர் மழை பெய்து வந்த நிலையில் இன்று காலை 11:30 மணி அளவில் 53.6 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. இன்று காலை முதல் பல்வேறு பகுதிகளில் பெய்து வந்தது. சாலைகளில் மக்கள் நடமாட்டம் இன்றி பெருமளவில் வெறிச்சோடி காணப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கை இந்த புயல் மழையின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நெல்லை, நவ. 27-

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கார்த்திகேயன் ள் தலைமையில் நடைபெற்றது. நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களின் கோரிக்கையின் தன்மைக்கேற்ப மனுக்கள் பதிவு செய்யப்பட்டதோடு, அம்மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அளிக்கும் வகையிலும், முக்கிய கோரிக்கைகள் மற்றும் பொது பிரச்சனைகள் தொடர்பான மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அளிப்பதற்கான வசதிகளும் செய்யப்பட்டிருந்தது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் கொக்கிரகுளம் பேருந்து நிறுத்தத்தில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எளிதாக வந்துசெல்லும் வகையில் ரூ.3.5 லட்சம் மதிப்பிலான கட்டணமில்லா பேட்டரி வாகனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊருக மளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், தனித்துணை ஆட்சியர் ஜெயா, மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஒரு நாள் இலவச பேருந்து பயணம்: எதிர்க்கட்சித் தலைவர் சிவா தொடங்கி வைத்தார்




புதுச்சேரி, நவ. 27-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில திமுக இளைஞரணி சார்பில், பொது மக்களுக்கான இலவச விடியல் பயணத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு துணை முதல்வர், திமுக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநில திமுக சார்பில் மாநிலம் முழுவதும் தொகுதிகள் வாரியாக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளான இன்று, புதுச்சேரி மாநில திமுக இளைஞரணி சார்பில் விடியல் பயணம் என்ற கருத்தை மையப்படுத்தி, இன்று புதுச்சேரி முழுவதும் பொதுமக்களுக்கான இலவச பேருந்துகள் மற்றும் டெம்போ பயணம் தொடக்க விழா திமுக மாநில இளைஞரணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் புதுச்சேரி மறைமலையடிகள் சாலையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக திமுக மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிவா கலந்து கொண்டு பொதுமக்களுக்கான இலவச பேருந்து மற்றும் டெம்போ பயணத்தை தொடங்கி வைத்து, இலவச கூப்பனை வழங்கினார். அதன்படி இன்று ஒரு நாள் முழுவதும் புதுச்சேரியில் நகரப் பகுதியில் இயக்கப்படும் 47 பேருந்துகள் மற்றும் 25 டெம்போக்களில் பொதுமக்கள் இலவசமாக பயணம் மேற்கொள்ளலாம். மேலும் வரும் சட்டமன்ற தேர்தலில் புதுச்சேரியில் திமுக ஆட்சி அமைந்தால், தமிழகத்தைபோல் புதுச்சேரியிலும் விடியல் பயணம் திட்டம் கொண்டுவரப்படும் என சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், தங்கவேலு, பழநி, அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், கோ. தியாகராஜன், மாநில தொண்டர் அணி அமைப்பாளர் வீரய்யன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டாக்டர் ரோ. நித்திஷ், அ.முகிலன், ஆ.அகிலன், மு.உத்தமன், ம.ரெமிஎட்வின், தே.தாமரைக்கண்ணன், வீ. தமிழ்ப்பிரியன், பா.கிருபாசங்கர், பஜூலுதீன், சந்துரு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கிராம உதவியாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்




திருவெண்ணெய்நல்லூர், நவ. 27-

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாநில செயலாளர் ஷாஜகான் தலைமை தாங்கினார். மாநில ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், மாவட்ட செயலாளர் குமார், வட்டத் தலைவர் காந்தி, மாவட்ட பிரச்சாரக் குழு செயலாளர் சுரேந்தர் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இதில் நான்காம் நிலைக்கு இணையான டி கிரேடு ஊதியம் வழங்கிட வேண்டியும், கிராம உதவியாளர்கள் வாரிசுக்கு கருணை அடிப் படையில் என் 33ல் திருத்தம் செய்து கருணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டியும், புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை வழங்கிட வேண்டியும், கிராம உதவியாளர்களுக்கு பதிவி உயர்வு பத்தாண்டு என்பதை ஆறாண்டு களாக குறைத்திட கோரியும் பல் வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதில் திருவெண்ணெய்நல்லூர் வட்டார அளவில் உள்ள கிராம நிர்வாக உதவியாளர்கள் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் சோமவார பூஜை



புதுச்சேரி, நவ. 27-

புதுச்சேரி ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் சோமவார பூஜை மகிலா சங்கத் தலைவி சத்யா ரமேஷ்பாபு தலைமையில் நடைபெற்றது.

புதுச்சேரி காமாட்சியம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வாசவி கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயிலில் சோமவார பூஜை விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. பூஜையில் மகிலா சங்க தலைவி சத்தியா ரமேஷ்பாபு முன்னிலையில் நடைபெற்ற விழாவில் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனின் அருளை பெற்றனர்.

# அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியம், நாகல் ஊராட்சிக்குட்பட்ட கீழ்நாகல் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசு சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஜிஎஸ்டி வரியை நீக்க வலியுறுத்தி போராட்டம்




திருவண்ணாமலை, நவ. 27-

திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையம் அருகில் தொழில் முன்னேற்ற சங்கத்தின் பேரவை துணைத் தலைவர் சௌந்தரராஜன் தலைமையில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் உணவு மருந்துகள் வேளாண் வீடு பொருள்கள் மற்றும் இயந்திரங்கள் போன்ற அத்தியாவசிய பொருள்களின் மீதான ஜி.எஸ்.டி. வரியை உடனடியாக நீக்க வேண்டும், புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அனைவருக்கும் சமூக பாதுகாப்பை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தி நாடு தழுவிய ஒருங்கிணைந்த போராட்டம் நடைபெற்றது. மேலும் இந்த போராட்டத்தில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் தொழில் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# கடலுக்குள் சென்ற காரைக்கால் மீனவர்கள் உடனடியாக கரை திரும்ப மீன்வளத்துறை உத்தரவு

காரைக்கால், நவ. 27-

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்ற ழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றதை தொடர்ந்து கடலுக்குள் சென்ற காரைக்கால் மாவட்ட மீனவர்கள் உடனடியாக கரை திரும்ப மீன்வளத்துறை உத்தர விட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட மீன்வளத்துறை துணை இயக்குனர் கோவிந்தசாமி, இது குறித்து வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை, தற்போது தீவிரமடைந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றதை தொடர்ந்து, காரைக்கால் புதுச்சேரி உள்ளிட்ட 9 துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. இதனை அடுத்து காரைக்கால் மாவட்டத்தில் இருந்து கடலுக்கு சென்று மீன் பிடித்துக் கொண்டிருக்கும் காரைக்காலை சேர்ந்த அனைத்து மீனவர்களும், உடனடியாக கரை திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மறு அறிவிப்பு வரும் வரை காரைக்கால் மாவட்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் காரைக்கால் மாவட்ட மீன்வளத் துறை சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மீனவ கிராம பஞ்சாயத்தார்கள் இத்தகவலை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்படகுஉரிமையாளர்களுக்கு தெரிவித்து அனைத்து கிராமங்களிலும் உள்ள படகுகளை உடனடியாக கரை திரும்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இன்றைக்குள் கரை திரும்பாத படகுகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மீன்வளத்துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மீனவர்கள் சிலர் கூறியதாவது: அண்டை மாவட்டங்களில், ஒரு சில நாட்களுக்கு முன்னதாகவே, கடலுக்குள் செல்ல வேண்டாம் என முன்னெச்சரிக்கையாக அறிவித்த நிலையில், காரைக்கால் மாவட்ட மீனவளத்துறை மட்டும் இன்று அறிவித் திருப்பது கண்டனத்திற்குரியது. அதிகாலை யிலேயே மீனவர்கள் கடலுக்குள் சென்ற நிலையில், உடனடியாக கரை திரும்புவது என்பது சாத்தியமில்லை. இனி வரும் காலங்களில் ஓரிரு நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பு செய்ய வேண்டும். என்றனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● புதன் ● நவம்பர் 27, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# தமிழகம் வந்தார் ஜனாதிபதி திரவுபதி முர்மு



நீலகிரி, நவ. 27–

ஜனாதிபதி திரவுபதி முர்மு நீலகிரி மாவட்டத்தில் இன்று முதல் நவம்பர் 30ம் தேதி வரை தங்கியிருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதற்காக 4 நாட்கள் அரசு முறைப் பயணமாக இன்று (நவ.27) நீலகிரி மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளார். இதையொட்டி நீலகிரி மாவட்டத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

டெல்லியில் இன்று காலை விமானம் மூலம் புறப்பட்டு கோவை விமான நிலையம் வந்தடைந்த அவர், ஹெலிகாப்டர் மூலம் நீலகிரி மாவட்டம் ஊட்டிக்குச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் நீலகிரி மலையில் நிலவும் கடும் மேகமூட்டத்தின் காரணமாக கோவையில் இருந்து கார் மூலம் கோத்தகிரி வழியாக உதகை புறப்பட்டுச் சென்றார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் ராணுவ பயிற்சிக் கல்லூரியில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்கும் ஜனாதிபதி திரவுபதி முர்மு, உதகையில் உள்ள கவர்னர் மாளிகையில் பழங்குடியினப் பெண்களுடன் உரையாடல் நடத்துகிறார். மேலும் திருவாரூர் மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிலும் அவர் கலந்துகொள்ள இருக்கிறார். பின்னர் திருச்சி விமான நிலையத்தில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்படுகிறார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு வருகையையொட்டி குன்னூர் ராணுவ முகாமில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது. அங்கு துப்பாக்கி ஏந்திய போலீசார் சுழற்சி முறையில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுகின்றனர். ஜனாதிபதி வருகையையொட்டி நீலகிரியில் டிரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நீலகிரி முழுவதும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# திமுக ஆட்சி காவல்துறையின் பொற்காலம்: மு.க.ஸ்டாலின்



சென்னை, நவ. 27–

சென்னை கலைவாணர் அரங்கத்தில் சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 3,359 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

* கடமை உணர்ச்சி மிக்கவர்களாக இருக்க வேண்டியர்கள் காவலர்கள்.
* காவலர்கள் போற்றக்கூடிய அரசாக திமுக அரசு உள்ளது.
* காவலர்களுக்கு பல திட்டங்களை தீட்டி செயல்படுத்தும் அரசு திமுக அரசு.
* ஸ்காட்லாந்து யார்டு போலீசாருக்கு இணையாக தமிழக போலீசார் பணியாற்றுகின்றனர்.
* 165 ஆண்டுகள் பழமை மிக்கது தமிழக காவல்துறை.
* திமுக அரசுதான் தமிழக காவல்துறையினருக்கு வாரம் ஒரு நாள் விடுமுறை அளித்தது.
* பெண் காவலர்களுக்காக ஆனந்தம் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
* திமுக ஆட்சிக்காலம் தமிழ்நாடு காவல்துறையினருக்கு பொற்காலம்.
* காவல்துறை மக்களுடன் நெருக்கமாக இருக்கும் துறை.
* காவல் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் கவனத்திற்கு வந்ததுமே அவை தீர்க்கப்படுகின்றன.
* குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதுதான் காவல்துறையினரின் முக்கிய கடமை.
* காவல்துறையினர் சாதி பாகுபாடு பார்க்கக்கூடாது.
* புகார் அளிக்கவரும் மக்களிடம் கனிவாக நடந்து கொள்ள வேண்டும்.
* மாநிலம் பாதுகாப்பாக இருந்தால் தான் தொழில் வளங்கள் வரும்.
* காவலர்கள் போற்றக்கூடிய அரசாகதிமுக அரசு உள்ளது.
* உயர் அதிகாரிகளிடம் கடைநிலை ஊழியர்களுக்கு பயம் இருக்கக்கூடாது. மரியாதை இருக்க வேண்டும்.
* குற்றங்கள் நடக்கவில்லை என்று சொல்வதுதான் பெருமைக்குரிய விஷயம் என்று கூறினார்.

# கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஆணையர் ஆய்வு



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி ஆண்டிபாளையம் பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமை பொறியாளர் (பொ) செல்வநாயகம்.

# இந்திய அரசமைப்பு உறுதிமொழி ஏற்பு





புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், இந்திய அரசமைப்பு உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர். உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல்.

# இந்திய அரசியலமைப்பு முகப்புரை உறுதிமொழி ஏற்பு



இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் வகையில் இந்திய அரசியலமைப்பு தினத்தையொட்டி தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் இந்திய அரசியலமைப்பு முகப்புரை உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். அருகில் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமலிங்கம்.

# சூரிய சக்தி ஸ்டவ் தயாரித்து கலசலிங்கம் பல்கலை மாணவர்கள் சாதனை



சங்கரன்கோவில், நவ. 27–

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலையில் இசிஇ இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் எம். முகமத் அன்வர், எஸ்.ஆகாஷ் சாம் ஜெயசீலன், எம்.ஈஸ்வரன், கே.இ. கோகுல், ஆர். துரை ராஜா ஆகியோர் பல்கலை சர்வதேச தொழிற்சாலை உறவு இயக்குநர் முனைவர் ராஜா கிருஷ்ணமூர்த்தி வழிகாட்டுதல்படி சூரியசக்தியால் இயங்கும் குரல் கட்டுப்பாட்டு இண்டக்ஸன் ஸ்டவ்" புராஜக்ட் செய்து பல்கலை துணைத்தலைவர் முனைவர் எஸ். சசிஆனந்த் முன்னிலையில் உபகரணத்தை இயக்கி காண்பித்தனர். இந்த உபகரணத்தில் 540 வாட்டில் இரண்டு சோலார் போர்டுகள் பயன்படுத்தப்பட்டு 1080வாட் மின் சக்தியை உருவாக்கிறது. இந்த சக்தி ஸ்டவையும் மற்றும் சேமிக்கும் 12 வோல்ட், 200 ஆம்ப் இரண்டு பேட்டரிகளையும் சார்ஜ் செய்வதால் 4.8 கிலோவாட் சக்தி சேமிக்கப்படுகிறது. எனவே ஸ்டவ், சூரிய ஒளி கிடைக்காத நாட்களிலும், இரவிலும் சமையல் செய்ய முடியும் என்றனர் மாணவர்கள். இந்த ஸ்டவ்வை செல்போனில் குரல் கட்டுப்பாடுடன் அல்லது செல்போன் ஆப்புடன் இயக்கலாம். ஸ்டவ்வை அதிக நேரம் தொடர்ந்து பயன்படுத்தும்போது ஏற்படும் அதிக வெப்பத்தை சமநிலைப்படுத்த பிரதயோக டிசைனில் இந்த புதிய ஸ்டவ்வை வடிமைத்திருக்கிறார்கள். சுற்றுச்சூழல் பாதிக்காது, சுலபமாகவும், விரைவாகவும் பயன்படுத்தலாம். மேலும் இதற்கான ஒட்டுமொத்த செலவு. ரூ1,20,000 ஆனது என்றனர் மாணவர்கள். பல்கலை தொழிற்சாலை உறவு அலுவலக முயற்சியால், இந்த சோலார் ஸ்டவ் செய்வதற்கு தேவையான நிதி உதவியை யுனிவர்சிட்டி ஆப் லண்டன் வழங்கியுள்ளது. சூரிய சக்தியால் இயங்கும் மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான ஸ்டவ் மக்களுக்கு பயன்படும் வகையில் செய்து சாதனை புரிந்த மாணவர்களையும் வழிகாட்டிய தொழிற்சாலை உறவு இயக்குநர் முனைவர். ராஜா கிருஷ்ணமூர்த்தி, அலுவலர் ஜெயக்குமார் ஆகியோர்களையும் வேந்தர் முனைவர். கே. ஸ்ரீதரன், இனணவேந்தர் டாக்டர். அறிவழகி ஸ்ரீதரன், துணைத்தலைவர் முனைவர். எஸ். சசிஆனந்த், துணைவேந்தர் முனைவர். எஸ். நாராயணன், பதிவாளர் முனைவர் வே. வாசுதேவன் ஆகியோர் பாராட்டினர்.

# பணியாளர்கள் நல சங்கம் போராட்டம்




சேலம், நவ. 27–

சேலம் கோட்டை மைதானத்தில் சேலம் மாநகர பொறியியல் பிரிவு அடிப்படை பணியாளர்கள் நல சங்கம் சார்பாக சிபிஎஸ்ஐ ரத்து செய்து பழைய ஓய்வூதியத்தில் சேர்க்க வேண்டி துறை வாரி சங்கங்கள் இணைந்து நடத்தும் மாபெரும் போராட்டம் நடைபெற்றன. இந்தப் போராட்டத்திற்கு லட்சுமணன் தலைமை தாங்கினார். கந்தசாமி முன்னிலை வகித்தார். நாகராஜன் சிறப்புரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தினக்குழி மற்றும் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிந்த 13 நபர்களுக்கு தணிக்கை துறை ஒப்புதல் பெற்று காலம் முறை ஓய்வூதியம் வழங்கி சேமநலநிதி கணக்கில் சேர்த்து பழைய ஓய்வூதியம் வழங்கியதைப் போல அனைவருக்கும் வழங்க வேண்டும் என்று பல்வேறு விதமான கோரிக்கைகளை முன்னிறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பினர்.

# வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பாக பணி புறக்கணிப்பு போராட்டம்





சேலம், நவ. 27–

சேலம் மாவட்டம் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம் சார்பாக பணி புறக்கணிப்பு தொடர் காத்திருப்பு மூன்றாம் கட்டபோராட்டம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்டத் தலைவர் அருள் பிரகாஷ், மாநில துணைத் தலைவர் அர்த்தனாரி, மாவட்ட இனை செயலாளர் சுமதி, கோபாலகிருஷ்ணன், பிரபு ஆகியோர் கலந்துகொண்டனர். மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்பப்பட வேண்டும். கருணை அடிப்படையான பணி நியாபகத்திற்கான உச்சவரம்பினை 5% ஆக குறைக்கப்பட்டுள்ளது. ரத்து செய்து மீண்டும் 25 சதவீதமாக நிர்ணயம் செய்திட வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் மற்றும் நடப்பாண்டிற்கான மாவட்ட வருவாய் அலுவலர் பட்டியலை விரைந்து வெளியிட வேண்டும். இன்னும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமான அரசு ஊழியர்கள் கலந்துகொண்டனர்.








OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# தமிழகம் வந்தார் ஜனாதிபதி திரவுபதி முர்மு

# காவல்துறையின் பொற்காலம் திமுக ஆட்சி—மு.க.ஸ்டாலின்



# கடலூர் அருகே கரையை கடக்கும் ‘ஃபெங்கல்’ புயல்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 27-11-2024 புதன்கிழமை •வெளியூர்: 28-11-2024 வியாழக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்